

# வேல்ஸ்

அறிவியல் தொழில்நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்

(DEEMED TO BE UNIVERSITY Estd., u/s 3 OF THE UGC ACT, 1956)

NAAC தரச்சான்றிதழ் 'A' பெற்ற நிறுவனம்

பல்லாவரம், சென்னை, இந்தியா

வேல்ஸ் குடும்பத் திருநாள் சிறப்பிதழ்

மாணவ இதழ்

# வேல்சு சிறகு

உள்ளத்து அனையது உயர்வு




வேல்ஸ் ஒன்பதாவது பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினர் மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திருமிகு எம். வெங்கைய நாயுடு அவர்களும் வேல்ஸ் வேந்தர் 'கல்வித் திருமகன்' டாக்டர் ஐசரி கே.கணேஷ் அவர்களும் மதிப்புறு டாக்டர் பட்டத்தினை விளையாட்டு வீராங்கனை பத்மஸ்ரீ பி.டி.உஷா, இந்தியப் பாதுகாப்பு ஆராய்ச்சி வளர்ச்சியின் தலைவர் டாக்டர் ஜி.சத்தீஷ் ரெட்டி, தொழிலதிபர் திரு.எஸ். ஜேவியர் பிரிட்டோ ஆகியோருக்கு வழங்குதல்; நிகழ்வில் இணைவேந்தர்கள் டாக்டர் ஆர்த்தி கணேஷ், பேராசிரியர் ஏ.ஜோதிமுருகன், பதிவாளர் பேராசிரியர் ஏ.ஆர்.வீரமணி ஆகியோர் பங்கேற்றல்


சிறகு : 5 இறகு : 8
07, அக்டோபர் 2019
பருவமுறைப் பறப்பு

வெளியீடு :
தமிழ்த்துறை
மொழிகள் புலம்
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்

சிறகு : 5
இறகு : 8

வேல்ஸ் பல்கலைக்கழகம்

வேல்சு சிறகு

உன்னத்து அனைத்து உயர்வு

இதழ் பேசுகிறது...

மாணவ இதழ்

07, அக்டோபர் 2019

வேல்ஸ் பல்கலைக்கழகத்தின்– வேல்ஸ் குடும்பத்தின் மாணவ இதழாக உங்கள் "வேல்சு சிறகு" உங்களை நோக்கிச் சிறகு விரித்து வருகிறது...! பாசமும் பசுமையும் தழைக்க வருகிறது...! மொழிகள் புலத்துத் தமிழ்த் துறையின் வெளியீடாக– இக்கல்வி ஆண்டின் முதல் பருவ வெளியீடாக உங்களின் சிந்தைக் கரங்களில் தவழ்ந்திட இதோ வருகின்றது...

வேல்ஸ் கல்விக் குழுமம், மகிழ்ச்சியின் உச்சத்தில் பெருமிதத்துடன் கொண்டாடுகின்ற திருநாள் வேல்ஸ் குடும்பத் திருநாள்' – நம் வேந்தர் அவர்களின் பிறந்த பொன்னாள்...! வேல்ஸ் வானத்தின் வண்ணமயமான இந்தக் கொண்டாட்டத்தின் அடையாளமாக வேல்ஸ் குடும்பத் திருநாளினைப் போற்றிடும் வகையில் "வேல்ஸ் குடும்பத் திருநாள் சிறப்பிதழாக" விரிக்கப்படும் சிறகு இது...

இன்று நம் இந்திய நாடு தொடர்ச்சியான பல முன்னேற்றங்களைக் கண்டு வருகின்றது. புதுமை படைத்தல், விண்வெளித் தொழில் நுட்பம், வளங்களைப் பாதுகாத்தல் போன்ற எண்ணற்ற துறைகளில் அரிய பல சாதனைகளை நிகழ்த்தி வருகின்றது. உலகிலேயே மிக அதிகமான இளைஞர்களைக் கொண்டிருக்கும் நாடு நம் இந்தியா என்ற சாதகத்தைக் கொண்டிருக்கும் இவ்வேளையில் நம் வேல்ஸ் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனத்தில் பயிலும் வேல்ஸ் மாணவ இளைஞர்களின் படைப்பாளுமையையும் அறிவாற்றல் சிந்தனைகளையும் வெளிக் கொணரும் நோக்கில் அக்டோபர் 2015 முதல் நம் வேல்ஸ் மொழிகள் புலத்துத் தமிழ்த்துறையின் வெளியீடாக மாணவ இதழாக வேல்சு சிறகு இதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது. அவ்வகையில் மாணவர்களின் உலகளாவிய பார்வைகளையும் சமுதாய போக்குகளையும் இச்சமூகத்தில் தங்களை ஈடுபடுத்தி அறம் சார்ந்த செயல்களைச் செய்யத் துடிக்கும் நம் மாணவர்களின் ஆக்கத் திறன்களே சிறந்த படைப்புகளாக இதழில் வெளிப்பட்டு நிற்கின்றன என்பதை நாம் அறிலாம்.

அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியால் இன்று உலகமே உள்ளங்கையில் என்ற நிலையில் உடனுக்குடன் உலகளாவிய செய்திகளை சமூக ஊடகங்கள் வழி நம் இளைஞர்களால் அறிந்து கொள்ள முடிகின்றது.

இவ்விஞ்ஞான நவீன யுகத்தில் நம் இந்தியச் சமூகத்தின் மீதான பார்வைகளையும் அவர்கள்தம் அக்கறைகளையும் இவ்விதழின் வழி நம் மாணவ இளைஞர்களின் படைப்புகளின் எழுச்சி மிக்க கட்டுரைகளின் மூலம் தெரிந்து கொள்ள முடிகிறது.

இத்தகைய படைப்பாளுமைகளை மாணவர்கள் வெளிப்படுத்த இடமின்றி, ஊக்குவிக்கப்போர் இன்றித் தமக்குள் போட்டுப் புதைத்து வைத்திருந்த பெருநிதியத்தையெல்லாம் தோண்டியெடுப்பதற்கான களமாக வேல்சு இதழ் அமைகின்றது. மேன்மேலும் இவை போன்ற பல படைப்புகளை இனி வரும் காலங்களில் நம் மாணவர்கள் வெளிப்படுத்தல் வேண்டும்; அதற்கு அவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கிலேயே வேல்சு இதழ் தொடர்ந்து சிறகடித்துக் கொண்டிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை!

இத்தகைய சிறப்பு மிக்க மாணவர்களை உருவாக்கி அவர்களைச் சாதனை மனிதர்களாகச் சரித்திர நாயகர்களாக வளர்த்தெடுப்பதே நம் வேல்ஸ் பல்கலைகழகத்தின் தலையாய நோக்கமாகும் என்பதை உயிர் மூச்சாக கொண்டு விளங்கும் நம் வேல்ஸ் வேந்தர் அவர்களுக்கு நம் மாணவர்கள் என்றென்றும் நன்றி கடன் பட்டவர்கள் ஆவர்.

வெள்ளி விழாவைக் கடந்து இருபத்து ஏழாம் ஆண்டில் வெற்றி நடை போடும் வேல்ஸ் குழுமத்துக் கல்விப் பயணத்தில் சரித்திரச் சுவடு பதித்த உன்னத நிகழ்வு– இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் மேதகு வெங்கைய நாயுடு அவர்களின் மேன்மை தாங்கிய வரவு...! வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் ஒன்பதாவது பட்டமளிப்பு விழாவினுக்கு மேதகு குடியரசுத் துணைத் தலைவர் அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை தந்து நம் மாண்பமை வேல்ஸ் வேந்தர் அவர்களோடும், மதிப்புறு முனைவர் பட்டம் பெற்ற கல்வியாளர்களுடனும் பங்கேற்று அணி செய்த கருத்துக்கினிய காட்சி, இந்த வேல்சு சிறகின் முகப்பு அட்டையின் ஒளிப்படமாக இங்கு எழில் சேர்த்துள்ளது!

கலைத் திறன்கள் பலவற்றைத் துடிப்போடும் புதுமைப் போக்கோடும் அள்ளித் தந்துள்ள வேல்ஸ் மாணவ மாணவியச் செல்வங்கள் உள்ளிட்டோரின் எண்ணத்து மலர்ச்சி இந்தச் 'சிறகு' முழுவதிலும் வண்ணம் கூட்டியுள்ளன! அவை கவிதை, கட்டுரை, துணுக்கு, ஓவியப் படைப்புகளாக அழகு கொஞ்சிட உங்களை நோக்கி அணிவகுத்து வருகின்றன...!

உச்சங்களைத் தொட்டிடும் வானச் சிந்தனையோடு இலக்கு நோக்கிய திசையில் பறக்கத் தொடங்கிடும் நம்பிக்கைச் சிறகு இது...! மரபு மாண்புகளில் கால் பதித்துப் புதுமை வெளியில் மாணவ ஆளுமை விரித்துச் சிலிர்த்தெழுந்திடும் சிறகு இது...! சமூக நீதி மின்னும் புதுமை வானில் பறந்திடும் சிறகு இது...! இதோ புறப்படுகிறது 'வேல்சு சிறகு'...! அனைவரும் வாருங்கள்...! வாருங்கள்...! உடன் இணைந்து சிறகு விரிப்போம்! விண்ணையும் கடந்து மேலே.... மேலே... எனப் பறந்திடுவோம்...! வென்றிடுவோம்...!!

சிறகு விரிப்பில் உங்களுடன்,
**ரா.ராஜா**
பொறுப்பாசிரியர் - வேல்சு சிறகு

# வேல்ஸ்

அறிவியல் தொழில்நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்



(DEEMED TO BE UNIVERSITY Estd. u/s 3 OF THE UGC ACT, 1956)

NAAC தரச்சான்று 'A' பெற்ற நிறுவனம்

பல்லாவரம் - சென்னை - இந்தியா

வேல்ஸ் குடும்பத் திருநாள் சிறப்பிதழ்

மாணவ இதழ்

# வேல்சு சிறகு

உள்ளத்து அனையது உயர்வு



மாண்புமிகு தமிழக முதல்வர் **திரு எடப்பாடி கே பழனிச்சாமி** அவர்களுக்கு
மலர்ச்செண்டு வழங்கி இனிது வரவேற்றிடும்
வேல்ஸ் வேந்தர் 'கல்வித் திருமகன்' **டாக்டர் ஐசரி கே கணேஷ்** அவர்கள்

சிறகு : 6 இறகு : 9
07, அக்டோபர் 2020
பருவமுறைப் பறப்பு

வெளியீடு :
தமிழ்த்துறை,
மொழிகள் புலம்,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்

வேல்ஸ் பல்கலைக்கழகம்

சிறகு:6
இறகு:9

# வேல்சு சிறகு

உள்ளத்து அனையது உயர்வு

07 அக்டோபர், 2020

மாணவ இதழ்

## இதழ் பேசுகிறது...

நம் வேல்ஸ்பல்கலைக்கழகத்தின் வேல்ஸ்குடும்பநாளாக, நம் வேந்தர் அவர்களின் பிறந்தநாளைகொண்டாடும் இந்நன்னாளில்மொழிகள்புலத்துத் தமிழ்த் துறையின் வெளியீடாக நம் வேல்ஸ்மாணவர்களின் படைப்பிதழாக, இக்கல்விஆண்டின் முதல்-பருவஇதழாக 'வேல்ஸ்சிறகு' இதழ்உங்களைநோக்கி சிறகடித்துபறந்துவருகிறதுசிந்-தனைவிருந்தமுதைதரவருகின்றது.

இக்கொரானாபரவல்காலச் சூழ்நிலையில் நம் வேல்ஸ்பல்கலைக்கழகத்தில் இணைய வகுப்புகள் வாயிலாக மாணவர்களுக்கு, கற்றல்- கற்பித்தல் பணிநடைப் பெற்றுவரும் இவ்வேளையிலும் கூட நம் வேந்தர் அவர்களின் பிறந்தநாள்அன்று வேல்ஸ்சிறகுஇதழ்வரஇருப்பது குறித்த செய்தியினை தெரிவித்தவுடன், மாணவர்கள்-தங்கள்மேலானபடைப்புகளைதத்தமது துறை பேராசிரியர்களின் உதவியோடு-ம்தமிழ்த் துறைப் பேராசிரியர்களைதொடர்புகொண்டும்மாணவர்கள்தங்கள-துபடைப்புகளைமின்னஞ்சல் (Email)மூலமாகவும், புலனம் (whatsup)வாயிலாகவும் தங்களதுபடைப்புகளைப்பதிவேற்றம் செய்து அனுப்பி வைத்தமையைப் பார்க்கும் போது படைப்புச் சிந்தனையின் மீதும் தமிழிலக்கியத்தின் மீதும், அவர்கள்கொண்டுள்ள பேரார்வத்தையும் படைப்பாற்றல்திறனையும் என்னவென்று சொல்வதென்றே தெரியா-மல்நம்மைதிகைப் படையசெய்யும் வகையில் இருந்தமையைக் காணமுடிந்தது.எச்சூழ் நிலையியையும் எதிர் கொள்ளும் நம் மாணவர்கள்கொரானாபேரிடர் காலச் சூழலிலும் தன்னம்பிக்கையோடுசமூகப் பொறுப்புணர்வோடுஇருப்பதைஅவர்கள் தம் படைப்பின் வழிஅறியமுடிந்தது.

நம் பல்கலைக்கழகவேந்தர் அவர்கள்கொரானாபேரிடர் காலத்தில்தன்னுயிரையும் பொருட்படுத்தாதுமக்களைகாக்கும் பணியில்ஈடுபட்டுமகத்தானசமூகசேவைநல்கியநம் மருத்துவர்கள், செவிலியர்கள், காவலர்கள், மற்றும் தூய்மை தொழிலாளர்கள் ஆகியே-ாரைகௌரவிக்கும் முகமாகஅவர்களின் பிள்ளைகளுக்கும் பொருளாதாரத்தில்நலிவுற்ற இதரஏழைமாணவர்களுக்கும் இலவசகல்விவழங்கப்படும் என்றுஅறிவித்தவேந்தர் அவர்களின் சமூகபொறுப்புணர்வை நம் மாணவர்கள்எண்ணிப் போற்றும் வகையிலும், வேந்தர் அவர்களின் தன்னலம் கருதாஉயர்ந்த உள்ளத்தின் வெளிப்பாட்டை பெருமி-தத்தை பறைச்சாற்றும் விதமாக நம் வேல்ஸ்பல்கலைக்கழகமாணவர்களும் அவர்கள் தம் படைப்பின் வழியேகொரானா பேரிடர் காலத்தில்மகத்தான சேவையாற்றி யோரைசிறப்பிக்கும் வண்ணம் அவர்களைப் பற்றிய ஓவியங்களும் கவிதைகளும் கட்டுரைகளும் இவ்விதழில்படைத்தளித்துள்ளனர்.

இக்கொரானாபேரிடர் காலச் சூழலிலும் நம் வேல்ஸ் மாணவர்களின் படைப்பாளுமைதிறன் தடைபடுதல்கூடாது என்ற உயர்ந்த உள்ளத்தோடும் சீரியசமூக சிந்தனையோடும் 'வேல்ஸ்சிறகு'மாணவர்படைப்பிதழ் வெளி வருவதற்குஊக்கமளித்து மாணவர்களின் எதிர்காலத்தின் மீது அக்கறையுணர்வோடுஅவர்களின் நல்வாழ்விற்கு துணை நிற்கும் வேந்தர் அவர்களின் தன்னலமில்லாஉயர்ந்த உள்ளத்தினைஎண்ணி வணங்குகிறேன். என் சிரம் தாழ்ந்த நன்றியினைஉரித்தாக்குகிறேன்.

சிறகுவிரிப்பில்உங்களுடன்

**திரு. ரா. ராஜா**

பொறுப்பாசிரியர்- வேல்சுசிறகு

**வேல்ஸ்**

அறிவியல் தொழில்நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்



(DEEMED TO BE UNIVERSITY Estd. u/s 3 OF THE UGC ACT, 1956)

NAAC தரச்சான்று 'A' பெற்ற நிறுவனம்

பல்லாவரம் - சென்னை - இந்தியா

வேல்ஸ் குடும்பத் திருநாள் சிறப்பிதழ்

மாணவ இதழ்

# வேல்சு சிறகு

உள்ளத்து அனையது உயர்வு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களிடம் கொரோனா நிவாரண மனிதநேயப் பணிகளுக்காக ரூபாய் ஒரு கோடியே ஒரு இலட்சத்திற்கான காசோலையை வேல்ஸ் பல்கலைக்கழக வேந்தர் கல்வித் திருமகன் டாக்டர் **ஐசரி கே.கணேஷ்** அவர்கள் வழங்குதல் உடன் அவருடைய துணைவியார் இணைவேந்தர் டாக்டர் **ஆர்த்தி கணேஷ்** அவர்கள் மற்றும் மகள் வேல்ஸ் குழுமத் துணைத் தலைவர் செல்வி **பிரீத்தா கணேஷ்** அவர்கள்

சிறகு: 7 இறகு: 10
07, அக்டோபர் 2021
பருவமுறைப் பறப்பு

வெளியீடு :
தமிழ்த்துறை,
மொழிகள் புலம்,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்

சிறகு : 7

இறகு : 10

வேல்ஸ் பல்கலைக்கழகம்

# வேல்சு சிறகு

உள்ளத்து அனையது உயர்வு

மாணவ இதழ்

07, அக்டோபர் 2021

## இதழ் பேசுகிறது...

நம் வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனத்தின் நம் வேந்தர் அவர்களின் பிறந்நாளினை வேல்ஸ் குடும்பத் திருநாளாகக் கொண்டாடப்படும் இந்நன்னாளில் மொழிகள் புலத்துத் தமிழ்த் துறையின் வெளியீடாக நம் வேல்ஸ் மாணவர்களின் படைப்பிதழாக இவ்வாண்டின் முதல் பருவ இதழாகச் சிறகடித்து பறந்து வருகின்றது.

பருகப் பருகத் திகட்டாத சிந்தனைத் தேனமுதை அள்ளித் தர வருகின்றது. பல பருவ இதழ்களைக் கடந்து, திறன்மிக்க நல்ல பல மாணவப் படைப்பாளர்களை வளர்த்தெடுத்து வருகின்றது நம் வேல்ஸ் சிறகு இதழ். "சுடர் விட்டெரியும் விளக்கேயாயினும் அதற்கும் ஓர் தூண்டுகோல் வேண்டும்" என்பார்கள். அத்தகைய தூண்டுகோலாய் இருந்து வேல்ஸ் மாணவர்களின் படைப்பாளுமைகளை இதழ் வழியே வெளிக்கொணரச் செய்யும் நம் வேந்தர் அவர்களுக்கு முதற்கண் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்பருவ இதழில் வெளிவந்துள்ள படைப்புகளைப் பற்றிக் கூற வேண்டுமானால் ஒவ்வொரு படைப்புகளுமே உன்னதமானச் சிந்தனைகளின் வெளிப்பாடே என்று கூறலாம். அத்தகையச் சிறப்பு வாய்ந்த படைப்புகளை நம் மாணவர்கள் இவ்விதழில் படைத்தளித்துள்ளனர். இவ்விதழில் பொருநை அகழ்வாய்வு குறித்த செய்திகளும், சுற்றுச் சூழல், நவீன அறிவியல் தொழில்நுட்பம் குறித்தக் கட்டுரைகளும் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாகும் பெண்குழந்தைகளின் சீரழிவு குறித்த கவிதைகளும் இடம் பெற்றிருப்பதோடு மகாகவி பாரதியார், அவர்களின் நினைவு நூற்றாண்டினையும், வ.உ. சிதம்பரனார் அவர்களின் நூற்றாண்டு பொன்விழாவினையும் போற்றும் விதமாக தம் தமிழ்த்துறையில் மாணவர்களுக்கிடையே நடைபெற்ற கலை இலக்கிய பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, கவிதைப்போட்டி, ஓவியப்போட்டி போன்ற போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுப் பெற்ற மாணவர்களின் படைப்புகளும் இடம்பெற்றிருப்பது இவ்விதழினை மேலும் அழகு ஊட்டுவதாய் அமையப்பெற்றுள்ளது.

நம் "வேல்ஸ் சிறகு" இதழ் வழியே கவிதைப் படைப்புகளை வழங்கி வந்த அ. மகாலெட்சுமி (மருந்தியல் துறை) மாணவி பின்னாளில் 'உப்புவனம்' என்ற கவிதை தொகுப்பு நூல் ஒன்றை 2019 ஆம் ஆண்டில் வெளியிட்டார். அதே போல் தற்போது பொறியியல் துறையில் (இசிஇ) மூன்றாம் ஆண்டு படிக்கும் மாணவராகிய ம.க. விஷ்ணுகுமார் நம் "வேல்ஸ் சிறகு" இதழிற்கு பல கவிதைப் படைப்புகளை வழங்கியவர், விரைவில் தான் எழுதி சேகரித்து வைத்துள்ள 250 கவிதைகளை ஒரு கவிதைத் தொகுப்பு நூலாக வெளியிட திட்டமிட்டுள்ளார் என்றும் அவ்வாறு எழுதுவதற்கு தனக்கு ஊக்கமளித்து கொடுத்த களம்தான் "வேல்ஸ் சிறகு இதழ்" என்றும் குறிப்பிட்டுள்ளான். இத்தகைய கவிதைப் படைப்பாளனாக தன்னை திகழ் செய்த பெருமை நம் வேந்தர் அவர்களுக்கே உரியது என்றும் வேந்தர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று என்னிடம் கூறினான். அம்மாணவன் கூறியது உள்ளபடியே மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது.

இதுபோல இன்னும் எண்ணற்ற பல மாணவர்கள் நம் "வேல்ஸ் சிறகின்" வழியே பறக்க இருக்கின்றார்கள் என்பதைக் கூறிக்கொண்டு இத்தகைய பெருமை மிக்க இதழ் வெளிவருவதற்கு என்றென்றும் எங்களுக்கு உறுதுணையாய் துணை நிற்கும் வேந்தர் ஐயா அவர்களுக்கும், இணைவேந்தர், பேராசிரியர் ஜோதி முருகன் ஐயா அவர்களுக்கும், இணை வேந்தர் டாக்டர் ஆர்த்தி கணேஷ், அம்மா அவர்களுக்கும் துணைத்தலைவர் செல்வி. பிரீத்தி கணேஷ் அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்து கொள்கிறேன். சிறகு விரிப்பில் உங்களுடன்,

ரா.ராஜா

பொறுப்பாசிரியர் - வேல்சு சிறகு

வேல்ஸ்
அறிவியல் தொழில்நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்
(DEEMED TO BE UNIVERSITY Estd. u/s 3 OF THE UGC ACT, 1956)
NAAC தரச்சான்று 'A' பெற்ற நிறுவனம்
பல்லாவரம் - சென்னை - இந்தியா
UGC 12B அங்கீகாரம் பெற்ற நிறுவனம்



G20
भारत 2023 INDIA
वसुधैव कुटुम्बकम्
ONE EARTH - ONE FAMILY - ONE FUTURE

வேல்ஸ் குடும்பத் திருநாள் சிறப்பிதழ்

மாணவ இதழ்

# வேல்சு சிறகு

உள்ளத்து அனையது உயர்வு




வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் பதிமூன்றாவது பட்டமளிப்பு விழாவில் (30.06.2023)
வேல்ஸ் வேந்தர் 'கல்வித் திருமகன்' கலைமாமணி டாக்டர் ஐசரி கே கணேஷ் அவர்கள் முன்னிலையில்,
மாண்புமிகு இந்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் மதிப்புறு டாக்டர் பட்டத்தினை,
ஃபிரெஷ் ஒர்க் நிறுவனத் தலைமைச் செயல் அலுவலர் திரு. கிரிஷ் மாத்ருபூதம், ஆர் எம் கே கல்விக் குழும நிறுவனர்
திரு. ஆர் எஸ் முனிரத்தினம், இந்தியத் தடகள வீராங்கனை திருமதி அஞ்சு பாபி ஜார்ஜ், கோவை இந்துஸ்தான்
மருத்துவமனைச் சிறுநீரகவியல்துறைப் பேராசிரியர் டாக்டர் எம் இராமலிங்கம் ஆகியோருக்கு வழங்கினார்;
உடன் வேல்ஸ் பல்கலைக்கழக இணைவேந்தர் டாக்டர் ஆர்த்தி கணேஷ், இணைவேந்தர்
பேராசிரியர் ஆ ஜோதி முருகன், வேல்ஸ் குழுமத் துணைத் தலைவர் டாக்டர் பிரீத்தா கணேஷ்,
துணைவேந்தர் பேராசிரியர் ச ஸ்ரீமன் நாராயணன், இணை துணை வேந்தர் பேராசிரியர் எம் பாஸ்கரன் ஆகியோர்

சிறகு : 9 இறகு : 13
7, அக்டோபர் 2023
பருவமுறைப் பறப்பு

வெளியீடு :
தமிழ்த்துறை, மொழிகள் புலம்,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்

**வேல்ஸ்**

அறிவியல் தொழில்நுட்ப
உயர் ஆராய்ச்சி நிறுவனம்

(DEEMED TO BE UNIVERSITY Estd. u/s 3 OF THE UGC ACT, 1956)

NAAC தரச்சான்று 'A' பெற்ற நிறுவனம்

பல்லாவரம் - சென்னை - இந்தியா

UGC 12B அங்கீகாரம் பெற்ற நிறுவனம்



भारत 2023 INDIA

वसुधैव कुटुम्बकम्

ONE EARTH - ONE FAMILY - ONE FUTURE

## டாக்டர் ஐசரி கே.கணேஷ் எம்.காம்., எம்.பி.ஏ., எம்.எல்., பிஎச்.டி.,

**நிறுவனர் - வேந்தர்**



### கல்விச் சாதனைச் சிகரம் நோக்கிடும் வேல்ஸ்...!

"அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர்விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என எளியோருக்குக் கல்வி வழங்கப்படுவதன் சமூகத் தேவையையும் மேன்மையையும் மக்கள் கவிஞர் பாரதியார் பெரிதும் வலியுறுத்திக் கவி முழக்கம் செய்கின்றார்!

பாரதியின் இத்தகு உயரிய சிந்தனையை நம் வேல்ஸ் கல்விக் குழுமம் சிரமேற்கொண்டுச் செயலாக்கி வருவதில் நான் பெரிதும் பெருமிதம் கொள்கின்றேன்! சமுதாயத்தின் கடைக்கோடி மாணவச் செல்வங்களுக்கும் கல்விக்கண் திறக்கப்பட்டு, அவர்களைக் கைதூக்கி விடவேண்டும் என்னும் ஒற்றை இலக்கை முன்வைத்து நம் வேல்ஸ் கல்விக் குழுமம் சிறப்புடன் செயலாற்றி வருவதை இங்குக் குறிப்பிடுவதில் மனம் மகிழ்கின்றேன்!

முதல் தலைமுறையில் பட்டம் பயிலும் மாணவச் செல்வங்கள், நம் வேல்ஸ் குடும்பத்து ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களின் மக்கட்செல்வங்கள், நலிவுற்ற நாடகக் கலைஞர்களின் இல்லத்துச் செல்வங்கள் ஆகியோருக்குக் கல்விக் கட்டணச் சலுகைகள் வழங்கப்பட்டு 'அறம் வளர் தொட்டிலாக' - அனைவருக்குமான 'நன்னம்பிக்கைக் கல்வி முனையமாக' நம் வேல்ஸ் விளங்குவதை எண்ணி நான் பெரிதும் உள நிறைவு கொள்கின்றேன்!

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய' அருட்பெருஞ்ஜோதி இராமலிங்க வள்ளலாரின் இந்த இருநூறாவது பிறந்த பொன் ஆண்டினில் நம் தமிழ்த் துறை வழியாக விழா எடுத்துப் பன்னாட்டுக் கருத்தரங்கு நடத்தியும், ஆய்வுக் கோவை நூல் வெளியிட்டும் வேல்ஸ் பல்கலைக்கழகம் வள்ளல் பெருமகனாருக்கு நிகழ்த்தியுள்ள ஞான தீப ஆராதனைப் பெருவிழாவை எண்ணி மகிழ்கின்றேன்! இனி ஆண்டுதோறும் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் வள்ளலார் குறித்துத் தமிழில் முனைவர் பட்ட ஆய்வை மேற்கொள்ளும் ஆய்வாளர் இருவருக்குக் கல்விக் கட்டணம் பாதியாகக் குறைக்கப்படுவதையும் இனிது வரவேற்று இன்புறுகின்றேன்!

உயர் கல்விச் சேவையில் இன்று முப்பத்தியொரு ஆண்டுகளைக் கடந்து, உயரிய இந்தியத் தரச் சான்றுகளைப் பெற்று, இருபதினாயிரம் மாணவச் செல்வங்களோடு வெற்றி நடை பயின்றுவரும் நம் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில், இந்தக் கல்வியாண்டில், புது முறையிலான உயர்கல்வி வாய்ப்பைத் தொடங்கியிருக்கிறோம்; வேல்ஸ் வளாகத்திற்கு வெளியே இருக்கின்ற மாணவர்களும் பயிலும் வகையில், 'இணையவழிக் கற்றல்' (Online Learning), 'தொலைநிலை மற்றும் இணையவழிக் கற்றல்' (Online Distance Learning), ஆகிய புதிய கல்வித் திட்டங்கள் பல்கலைக்கழக நல்கைக் குழுவின் அங்கீகாரத்துடன் தொடங்கப்பட்டுள்ளமை குறித்துப் பெருமிதம் கொள்கின்றேன்!

நம் வேல்ஸ் மாணவச் செல்வங்களாம் இளைய நிலாக்களின் அறிவியல் வெளிப்பாட்டை, படைப்பாற்றலை, கலைத்திறனைத் தக்க வகையில் கண்டெடுத்து, அவர்களை 'இதழ் நிலவின்' விக்ரம் லேண்டர்களாக - பிரக்ஞான் ரோவர்களாக அடையாளப்படுத்திடும் ஆக்கப் பணியைப் பொறுப்புடன் ஏற்று, 'வேல்சு சிறகு' வழியாக அதனைச் செயலாக்கி வரும் வேல்சு இதழின் பொறுப்பாசிரியர் உள்ளிட்ட தமிழ்த் துறைப் பேராசிரியர்கள் அனைவருக்கும் என் நெஞ்சம் நிறைந்த பாராட்டுகள்!

'வேல்ஸ் குடும்பத் திருநாள் சிறப்பிதழாக', வழக்கம்போல் இந்த ஆண்டும், 07.10.2023 அன்றுச் சிறகு விரிக்கும் 'வேல்சு சிறகினை' மகிழ்ந்து வரவேற்கின்றேன்! உங்கள் அனைவரின் தூய அன்பின் காரணமாகவே 'எழுத்தறிவிக்கும்' உன்னதப் பணியை எதிர்கொண்டு, நம் வேல்ஸ் கல்விப் பயணம் சாதனைச் சிகரம் நோக்கி வெற்றியுடன் தொடர்வதை எண்ணி, இந்த இனிய நன்னாளில் வாழ்த்தி இன்புறுகின்றேன்!

(ஐசரி கே.கணேஷ்)